மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. (குறுக்கீடு) இதிலே, கிளாரிபிகேஷன் அனுமதிப்பது இல்லை, கிளாரிபிகேஷன் வேண்டுமானால் 55-லே கொண்டு வரும் வரை காத்திருந்திருக்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல அந்தப் பள்ளிக்கூடங்களில் ஐப்தி நடவடிக்கைகள் நடைபெற்றனவா இல்லையா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினை என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு இதற்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நான் கேட்டிருக்கிறேன். அது மட்டும் அல்ல, கல்வி நிறுவனங்கள்மீது பிராப்பர்டி டாக்ஸ், விதிப்பது பற்றியே மறு பரிசீலனை செய்வதற்கு வருகிற 4 ஆம் தேதியன்று ஒரு கேபினேட் மீட்டிங்கைக் கூட்டச் சொல்லியிருக்கிறேன். அந்த கேபினேட் மீட்டிங்கின்போது இந்தப் பிரச்சினை முழுமையாக மறு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஆர். தங்கராஜ் (குறுக்கீடு) கிளாரிபிகேஷன் இல்லை. முதலமைச்சர் இப்போது சொன்னதற்குப் பிறகு கிளாரிபிகேஷன் என்ன இருக்கிறது. உட்காருங்கள், கிளாரிபிகேஷனுக்கு அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) கிளாரிபிகேஷன் கேட்க வேண்டுமென்றால் விதி 55-லே எடுக்கின்றவரைக்கும் பொறுத்திருந்திருக்க வேண்டும்

(ஆ) திருச்சி அரியலூர் வட்டம், திருமானூர் ஒன்றியம் கோயில்எசனை கிராமத்தில் ஜே.வி.விடி. திட்ட வீடுகள் இடிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். தங்கராஜ், திரு. சி. சுவாமிநாதன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டம், திருமானூர் ஒன்றியம் கோயில்எசனை கிராமத்தில், தமிழக அரசு ஆதிதிராவிடர்களுக்கு பட்டா வழங்கிய இடத்தில், ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எல்லாம் அங்கே இடிக்கப்பட்டிருப்பதாக ஒரு பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று அனுமதி கோரி உள்ளார்கள். திரு. தங்கராஜுக்கு, அனுமதி வழங்கி இருக்கிறேன். சுருக்கமாக அந்தப் பிரச்சினையைச் சொல்லக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருமானூர் ஒன்றியம் கோயில்எசனை கிராமத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிய போது ஜாதி இந்துக்கள் கலவரம் செய்து கட்டிய வீடுகளை இடித்து, இருந்த சிமெண்ட் மூட்டைகளையும்,

கம்பிகளையும் எடுத்துக்கொண்டு நாசம் செய்துள்ளார்கள். ஆதி திராவிடர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டி ஊரை விட்டே துரத்தி உள்ளனர். இது சம்பந்தமாக அரசுக்கு அவர்கள் பல்வேறு முறையில் புகார்கள் கூறியும், அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறையும் இது சம்பந்தமாக மௌனம் சாதிப்பது ஏன் என்று தெரியவில்லை. ஆதி திராவிடர்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்து அவர்கள் உரிமையையும் உடமையையும் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை ஆகும். உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கு அந்த வீடுகளை மீண்டும் கட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, அதைக் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அரசு முன் வருமா என்று இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் கோட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1993- 94ஆம் ஆண்டு நடப்பு நிதி ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு என்று தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு திருச்சி மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரால் அனுமதி வழங்கப்பட்டு அதன்படி இரண்டு கிராமங்கள் திருச்சி மாவட்டத்திலே, திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திலே முன்னுரிமை அடிப்படையிலே வீடுகள் கட்டுவதற்கு ஒன்றியத்தினுடைய கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரால் தேர்வு செய்யப்பட்டது. அதிலே ஒரு கிராமம் வெங்கனூர், மற்றொன்று கோயில்எசனை. வெங்கனூருக்கு 20 வீடுகளும், கோயில்எசனைக்கு 20 வீடுகளும் வழங்கப்பட்டு இருந்தன. இன்றைக்கு வெங்கனூர் கிராமத்தில் தொடங்கப்பட்ட பணிகள் எந்தவிதமான இடையூறும் இல்லாமல் திட்டம் முடிவு பெற்று இருக்கிறது. அந்தக் கோயில்எசனை கிராமத்தில் நில ஆர்ஜிதம் செய்து வீடுகள் கட்டுவதற்காக கைவசப்படுத்தப்பட்டு சுமார் 175 ஆதிதிராவிடர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-35

இந்த சமயத்தில்தான் அரசு கையகப்படுத்தி ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட நிலத்தில் மேற்படி கோயில்எசனை கிராமத்தில் முதல் கட்டமாக இந்த ஆண்டு 20 நபர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் பணியைத் துவக்கி செயல்படுத்திக்கொண்டு இருக்கும்பொழுது, கிராமத்தில் இருக்கின்ற சிலர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொகுப்பு வீடுகள் கட்டும் இந்த இடம் தொடர்பாக வழக்கு எண். 2684/94-ல் அந்த வழக்கைத் தொடர்ந்து இடைக்கால தடை உத்தரவு

பெற்றிருக்கிறார்கள். இந்த இடைக்கால தடை உத்தரவு இருக்கின்ற சமயத்தில் சென்னை உயர் நீதிமன்றத்திலே இந்த வழக்கு நிலுவையிலே இருக்கின்றபோது சேதம் விளைவிக்கின்ற எண்ணத்தோடு அங்கே பணிகள் தொடர்ந்திருந்தாலும்கூட இந்த கோயில்எசனை கிராமத்திலே சுமார் 7 நபர்கள் அந்த இடத்திற்குச் சென்று அங்கே இருக்கின்ற பொருள்களை அப்புறப்படுத்தி அதிலே ஏர் ஓட்டியிருக்கின்ற நிலைமையை உருவாக்கி இருந்தார்கள். அதுசம்பந்தமாக அந்த 7 நபர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை தொடரும் பொருட்டு லால்குடி வட்டம், கள்ளக்குடி காவல் நிலையத்திலே 2-3-1994 அன்று அரியலூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் மூலமாக புகார் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் புகாரின் அடிப்படையில் கள்ளக்குடி காவல் நிலையத்திலே 2-3-1994-ந் தேதி அன்று குற்ற எண். 217/94-படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 7 நபர்கள் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் மூலமாகவும் நடவடிக்கை தொடரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல அங்கு ஆதிதிராவிடர் மக்களுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை. இந்த நில ஆயத்திலே மட்டும் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினாலும் சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினாலும் இது சம்பந்தமாக அரசு அதிக கவனம் செலுத்தி இன்றைக்குத் திரும்ப அந்த நிலத்தைப்பெற்று அந்த ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குண்டான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறது. இதுசம்பந்தமாக ஆதிதிராவிடர் மக்களுக்கு எந்த விதமான பிரச்சினையும் அங்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. விதி 110 ன்-கீழ் வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிக்கை.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அளித்த விவசாயிகளுக்குக் கூடுதல் கரும்பு விலை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி அளித்திருக்கிறேன். அவ்வறிக்கையைப் பேரவைக்கு வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி 110-ன் கீழ் 1993-94 ஆம் ஆண்டுக்கு 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளித்த விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு விலை அளிப்பது பற்றிய அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்கிறேன். கடந்த கால அனுபவத்தின்படி கரும்புக்கு மாநில பரிந்துரைகளுக்கு மேலாக கூடுதல் கரும்பு விலை கொடுப்பதினால், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விவசாயிகள் மனம் உவந்து